## இலங்கை மின்சார சபை - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சபை

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 1.2 மற்றும் 1.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, சபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 தொகுதியினது நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் துணைக் கம்பனிகளில் சீஈபீ இற்குள்ள உரித்துடைமை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

| கம்பனியின் பெயர் | நேரடியான ஆர்வம் வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி | வரையறுத்த எல்ஈசீஓ (தனியார்) கம்பனி | சீஈபீ இற்கான தொகுதியின் ஆர்வம் |
|---|---|---|---|
| | % | % | % |
| (i) வரையறுத்த பவான் தனவி (தனியார்) கம்பனி | 51 | - | 32 |
| (ii) வரையறுத்த நிவுது (தனியார்) கம்பனி | 48 | - | 30 |
| (iii) வரையறுத்த நிவுது அசுபினில்லா (தனியார்) கம்பனி | 48 | - | 48 |
| (iv) வரையறுத்த அன்டி எல்ஈசீஓ மீற்றரிங் (தனியார்) கம்பனி | - | 70 | 38.5 |

## 1.3 இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 2 – பதிவேட்டுப்பொருட்கள்:** நியமத்தின்படி, பதிவேட்டுப் பொருட்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் அளவிடப்படவேண்டியதுடன் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் முதல் வந்தது முதல் வெளியேற்றல் (எவ்ஐஎவ்ஓ) அல்லது நிறையளித்த சராசரிக் கிரய சமன்பாட்டைப் பயன்படுத்துதவதன் மூலம் ஒப்படைத்தல் வேண்டும். ஆனால் நியமத்திற்கு முரணாக, சபையானது விநியோக வலயங்களில் அதனது பதிவேட்டுப்பொருள் மதிப்பீட்டிற்காக நியம விலைகளைப் பயன்படுத்தியிருந்தது.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புக்களின் படி, விலைத் தளம்பலுக்கு உட்பட்ட பதிவேட்டுப்பொருட்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரயங்கள் அனுமதிக்கப்படலாம் ஏனைய நிலைமைகளில் பதிவேட்டுப்பொருட்களின் பெறுமதி கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் பெறுமதியிடப்பட வேண்டும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நடப்பு நிலமைகளின் படி, விலைகள் அதிகரித்துச் சென்றனவே தவிர தளம்பலுக்குட்பட்டிருக்கவில்லை. அனேக சந்தர்ப்பங்களில் சபை அதனது நியம விலைகளை உள்ளபடியான விலைகளிலும் பார்க்க அதிகரித்துக் காட்டியிருந்தமை தெளிவாகின்றது. உதாரணமாக: 2012 இல் பொருளின் விலைகள் மற்றும் ஊழிய கூலிகளை மிகையாக மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேறிய வருமானம் முறையே ரூபா 1,647 மில்லியன் (2011 - ரூபா 2,920 மில்லியன்) மற்றும் ரூபா 1,034 மில்லியன் (2011 - ரூபா 803 மில்லியன்) ஆக இருந்தது. அத்துடன் வருமானக் கூற்றில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட மேந்தலைகளாக ரூபா 1,574மில்லியன் தொகையொன்று (2011 - ரூபா 1,255 மில்லியன்) வேலைகள் கிரயத்திற்குச் சாட்டப்பட்டிருந்தது. (உள்ளபடியாக பயன்படுத்திய ஊழிய மணித்தியாலங்களிற்காக நியம வீதங்களை பிரயோகித்து கணிக்கப்பட்டது)

அதன் விளைவாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள், பேணுதல்கள் மற்றும் முடிவடைந்த வேலைகளின் நியாயமான பெறுமதிகள் அவதானிக்கப்படவில்லை.

(ii) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களை விலை மதிப்பிடுவதற்காக சீரான கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் வழிகள் மற்றும் சில விநியோக வழிகள் உள்ளபடியான கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை சேவை பிரதான இணைப்பு (எஸ்எம்சீ), முறைமை உருவாக்கல் (எஸ்வைஏ), ஈரான் நிதியளிப்புச் செயற்திட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொழில்கள், கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு (டீசீபீ) போன்ற ஏனைய தொழில்கள் நியமக் கிரயத்தில் விலை மதிக்கப்பட்டிருந்தன.

(ஆ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியத்திற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்தல்** : கிராமிய மின்சாரம் வழங்கல் செயற்திட்டங்கள் உள்ளடங்கலான மின்சாரத்தை பிறப்பித்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவிகள் மற்றும் மூலதன மானியங்கள் என்பவற்றில் சில திறைசேரியினால் மூலதன பங்களிப்பாக கருதப்படாதிருந்த போதிலும் அவை நீண்டகாலமாக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாகக் கருதப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி, சபைக்கான மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 96 பில்லியன் ஆனதுடன் சபையின் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 110 பில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 14 பில்லியன் அரசாங்க மானிய வேறுபாட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டடிருந்த கணக்கீட்டுப் பரிகாரம் நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) **எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 – எஸ்எல்எவ்ஆர்எஸ் இனை முதற்தடவையாக கடைப்பிடித்தல்**: மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்களில் பின்வரும் விடயங்களிற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) பதிவேட்டுப்பொருட்கள் மற்றும் ஏனையவைகள்

(ஆ) பதவியினர் கடன்பட்டோர்

(இ) குத்தகைகள்/பொறி ஆதனம் உபகரணம்

(ஈ) காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு

(உ) வியாபாரச் செலுத்தவேண்டியவைகள்

(ஊ) தொடர்புடைய தரப்பினர்களிற்கு செலுத்தவேண்டிய தொகை

(ஈ) **எல்கேஏஸ் 24 – தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்** : எல்கேஏஸ் 24 இனால் வேண்டப்பட்டவாறு தொடர்புடைய தரப்பினர்களுடனான உறவின் தன்மை அவ்வாறே கொடுக்கல்வாங்கல் குறித்த தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான தொடர்பின் எதிர்காலத் தாக்கங்களை புரிந்துகொள்வதற்குத் தேவையான நிலுவை மீதிகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்களை சபை வெளிப்படுத்தியிருக்கவில்லை. சபையுடன் உறவினைக் கொண்டுள்ள கம்பனிகளுடனான பின்வரும் ஒப்பந்தங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) வவுனியா கிளிநொச்சி பரிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஜேபீஐசீ நிதியளித்தல் செயற்திட்டம்.

(ii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் பரிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம்.

(iii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் கிழக்கு மாகாணச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,345 மில்லியன் ஆகும்)

(iv) வட கிழக்கு வலு பரிமாற்றல் அபிவிருத்திச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 425 மில்லியன் ஆகும்)

(v) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் II ஆம் கட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,815 மில்லியன் ஆகும்)

(vi) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் I ஆம் கட்டம் - ஜீஓஎஸ்எல் நிதியளித்தல் செயற்திட்டம்.

(vii) காலி மின் உபநிலையம், உருவாக்கல் மற்றும் புனரமைத்தல் செயற்திட்டம்

(viii) மீள புதுப்பிக்கத்தக்க சக்திவளச் செயற்திட்ட உறிஞ்சலுக்கான மின் உபநிலைய உருவாக்கம் - சீதாவக, பலாங்கொடை, பதுளை, நுவரெலியா, உகுவல மின் உபநிலையங்களின் உருவாக்கம் மற்றும்

மஹியங்கன புதிய மின் உப நிலையத்தினை நிர்மாணித்தல் (ஒப்பந்தத் தொகை ரூபா 2,336 மில்லியன் ஆகும்)

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்கள் தவிர்ந்த ஏனைய சேதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைக்கு முரணாக காப்புறுதி எஸ்க்ரோ நிதியத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படாதிருந்ததுடன் அந்த இழப்புக்களும் சேதங்களும் சீஈபீ நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறித்துரைக்கப்பட்டிருந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான ரூபா 71 மில்லியன் செலவினம் காப்புறுதி எஸ்க்ரோ நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படாது 2012 ஆம் ஆண்டில் சபை நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் அச் சேதங்களிலிருந்து சபைக்கு ஏற்பட்ட நட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாதிருந்ததுடன் அவைகளை நேரடியாக வருமானத்திற்கு சாட்டுதல் செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்ததனால் சபையின் ஆதனங்களிற்கு ஏற்பட்ட இழப்பினை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான பதிவேடுகள் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) காப்புறுதி எஸ்க்ரோ நிதிய முதலீட்டிலிருந்து கிடைத்திருந்த வட்டி வருமானம் எஸ்க்ரோ நிதியத்தின் வருமானமாக கொள்ளப்படாது நிதியத்தை தோற்றுவித்த காலம் முதல் சபையின் வருமானமாகக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வில் இத்தவறு சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டிலிருந்து தவறு திருத்தப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளில் செய்யப்பட்ட தவறுகளுக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் காப்புறுதி எஸ்க்ரோ நிதிய மீதியும் அதன் முதலீட்டு மீதியும் சமப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக கடந்த அண்மித்த 2005 முதல் 2010 வரை ஆறு ஆண்டுகளிற்கான சீராக்கப்படாத மீதிகள் ரூபா 3,082 மில்லியனாக காணப்பட்டது.

(இ) 2010/2011 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 119 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் வரி பொருத்தமற்ற முறையில் அறவிடப்பட வேண்டியதாக காட்டப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக, 2012 திசெம்பர் 31

இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஏனைய பெறவேண்டியவைகளும் நட்டமும் அத்தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) விசேட நிகழ்வுகளிற்கு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலு மற்றும் சக்திவள அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 62 மில்லியன் தொகை செலவு மீதியொன்றாக காணப்பட்டது. ஆனால், தொடர்புடைய கோவையிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் கணக்காய்வில் கணிக்கப்பட்ட உள்ளபடியான பெறப்பட வேண்டிய தொகை ரூபா 14 மில்லியனாகும். ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா 76 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு பாதுகாப்பு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலு மற்றும் சக்திவள அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 8 மில்லியன் ஆகக் காணப்பட்டது. ஆனால், அமைச்சினால் பேணப்பட்ட பதிவேடுகளின் படி பெறப்பட வேண்டிய உள்ளபடியான தொகை ரூபா 6 மில்லியனாகும். ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா 2 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2011 சனவரி 01, 2011 திசெம்பர் 31 மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் வாகனங்களின் நியாயமான பெறுமதியை மதிப்பிடுதல் மற்றும் அவற்றின் கணக்கீடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பொருத்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்புடைய குழுக்களிற்கு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக சந்தைப் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்காக ஒரேசீரான முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, தலைமையகம், சொத்து முகாமைத்துவம், மையப்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் வினியோக வலயம் 1 இன் குழுக்கள் 2011 சனவரி 01 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதியினை அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் கிரயத்தினை சேர்ப்பதன் மூலம் மதிப்பிட்டிருந்தன. எவ்வாறாயினும், ஏனைய பிரிவுகளின் விலை மதிப்பீட்டுக் குழுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதிகளை முதலில் கணிப்பிட்டு அதன் பின்னர், அந்த சந்தைப் பெறுமதிகளை முறையே 6.7 சதவீத மற்றும் 7.6

சதவீத கழிவுக் காரணிகளைக் கொண்டு 2011 திசெம்பர் 31 மற்றும் 2011 சனவரி 01 இல் உள்ளவாறான வகனங்களின் சந்தைப் பெறுமதியினைக் கணிப்பிட்டிருந்தன.

(ii) மேற்படி தவறு காரணமாக (2012 ஆம் ஆண்டின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகனங்களின் நியாயப் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டிருத்தல்) குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சந்தைப் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மோட்டார் வாகன கணக்கு மீதி ரூபா 396 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) வீதியில் ஓட முடியாமை காரணமாக விலை மதிப்பீட்டுக் குழுக்களினால் 63 வாகனங்கள் பாவனைக்குதவாதவை என பிரகடனப்படுத்தப்பட்டு அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த வாகனங்களின் அகற்றல் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(எ) சபை 2012 ஆம் ஆண்டில் முதற் தடவையாக அதன் நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வரிச் சீராக்கத்தினை கைக் கொண்டிருந்ததுடன் 2012 சனவரி 01 மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னைய நிதிக்கூற்றுக்களை எஸ்எல்எப்ஆர்எஸ் உடன் இணக்கமுறும் வகையில் மீளமைத்திருந்தது.

1982 முதல் வரித் திரட்டுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 43,894 மில்லியனாகும். அக்குறைபாடு காரணமாக, வரிப் பொறுப்பினை மதிப்பிடுகையில் வரி வருமானத்திலிருந்து அச் சொத்துக்களுடன் தொடர்புடைய மூலதனப் படியின் பங்கை சபைக்கு கழிக்க முடியாதிருந்தது. ஆகையால், பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டில் அந்த ரூபா 43,894 மில்லியன் சொத்துக்களின் பெறுமதியை நிரந்தர வேறுபாடாக சபை கருத்திற் கொண்டடிருந்தமையின் விளைவாக அண்ணளவாக ரூபா 12 பில்லயனால் குறைத்துக் காட்டப்பட்டு முன்கொண்டுவரப்பட்டிருந்த வரி நட்டத்தினை எதிர்கால வரிப்பொறுப்பிலிருந்து அறவிட முடியவில்லை.

(ஏ) 2012 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பொறி ஆதன மற்றும் உபகரணங்களின் அகற்றல்களிலிருந்தான முறையே ரூபா 55 மில்லியன் மற்றும் ரூபா 57 மில்லியன் இலாபம் புதிய எஸ்எல்எப்ஆர்எஸ் பிரயோகத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மீளச் சீராக்கப்பட்டிருக்கவில்லை. அகற்றப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறாமையால் இத்தவறின் தாக்கத்தினை மதிப்பிட முடியாதிருந்தது.

(ஐ) 2011 இல் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இருப்பு மெய்மைய்வில் சேதமடைந்த இருப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 30 மில்லியன் தொகையான இருப்பு விடயங்கள் 2012 இன் மெய்மையாய்வுச் சபையால் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்காதமையின் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதி மற்றும் அசைவுறாத இருப்பு, மெதுவாக நகரும் மற்றும் சேதமடைந்த இருப்பு ஆகியனவற்றிற்கான நிதிஏற்பாடு இரண்டும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஒ) 2012 இல் மேல் மாகாண தெற்கு (டபிள்யூபீஎஸ்) II அலுவலகத்தினால் வழங்குனர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 18 மில்லியன் தொகையான 7 கொடுப்பனவுகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்கள் பொருட்களை வழங்கியிருந்த போதிலும் பொருத்தமற்ற விதத்தில் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) ஹம்பாந்தோட்டை பிரதேச அலுவலகத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,505 மில்லியன் தேறிய புத்தகப் பெறுமதியுடைய உயர் அழுத்த (எச்ரீ) மற்றும் தாழ் அழுத்த (எல்ரீ) வலயமைப்புக்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி காரணமாக அகற்றப்பட்டிருந்தன. ஆனால், 2009 முதல் வருடாந்த பௌதீக மெய்மையாய்வினால் அவை புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும் வலய அலுவலகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் எவ்விதச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்படாது காணப்பட்டன. அக்குறைபாடு காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பொறி, ஆதன மற்றும் உபகரணங்கள் அத்தொகையால் முறையே அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

அத்துடன், மீள் மதிப்பீட்டுத தொகைகள், அகற்றப்பட்ட திகதிகள், இழிவுப் பெறுமதிகள் போன்ற தொடர்புடைய தகவல்கள் இன்மை காரணமாக பேரேட்டுக் கணக்குகளிலுள்ள அசைவுறாத அந்த எச்ரீ மற்றும் எல்ரீ வலயமைப்புக் கிரயங்களிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான தாக்கத்தினை கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

(ஔ) முன்னைய ஆண்டுகளில் மூலதனமாக்கப்பட்டிருந்த விநியோக வலயம் 4 இல் எஸ்ஐடீஏ செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் மற்றும் விநியோக வழிகளுடன் தொடர்புடைய விலை முரண் ரூபா 121 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அந்த விலை முரண் தொடர்புடைய சொத்துக் கணக்கிற்கு சேர்த்துக் கொள்ளப்படாது பரிமாற்றல் மற்றும் வினியோக வழிகளின் கீழ் (குறிப்பிட்ட பரிமாற்றல் மற்றும் வினியோக வழி) புறம்பான விடயமொன்றாக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட திருத்தின் காரணமாக சேதத்தின் தாக்கம் மதிப்பிடப்பட்டு அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்ஈசீஓ இடமிருந்து பெறவேண்டிய தொகை எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இவ்விரண்டு நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 19 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைமை அலுவலகத்திற்கும் சபையின் உப பிரிவுகளிற்குமிடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் இணங்காதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 269 மில்லியன் தேறிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், அந்த மீதிகள் முறையற்ற விதத்தில் வியாபார மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சொத்துக்கள் பட்டோலைகளின் படி, முடிவுறா வேலைகளிலிருந்து பூரணப்படுத்தப்பட்ட தொழில்களை 2012 இல் பொறி ஆதன உபகரணங்களிற்கு

மாற்றுதலுக்கும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முடிவுறா வேலைகள் பட்டோலைகளிற்குமிடையே ரூபா 307 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) முடிவுறா வேலைகள் கணக்கிலிருந்து 2012 இல் மாற்றப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட தொழில்களின் பெறுமதிக்கும் வினியோக வலயம் 3 இல் முடிவுறா வேலைகள் கணக்கிலிருந்து பொறி ஆதன உபகரணங்களிற்கு மாற்றப்பட்ட தொழில்களின் பெறுமதிக்குமிடையே ரூபா 39 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச தொங்கல் மீதி மற்றும் பிரதான தொங்கல் மீதி என்பன முறையே ரூபா 16 மில்லியன் மற்றும் ரூபா 8 மில்லியனாக காணப்பட்டன. அந்த தொங்கல் மீதிகளிற்கான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு அத் தொங்கல் மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2008 சனவரி 24 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு ரூபா 38 மில்லியன் பொருட்கள் சேவைகள் வரி மேலதிகக் கொடுப்பனவை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் எழுகின்ற சபைக்கான ஏதேனும் வரிப்பொறுப்பிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்படாது 2002 சனவரி முதல் பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) மேல் மாகாண தெற்கு II (டபிள்யூபீஎஸ் - II) இலுள்ள எல்ஈசீஓ இன் பின்வரும் வரவு மற்றும் செலவு மீதிகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாகத் தீர்க்கப்படாது காணப்பட்டன.

| கிளை | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | |
|---|---|---|---|
| | | ரூபா மில். | ரூபா மில். |
| நுகேகொட | 9742661/8 | (11) | |
| | 9742662/8 | 5 | |
| | 9742009/8 | (7) | 13 |
| கோட்டே | 9742663/8 | (9) | |
| | 9742008/8 | 14 | |
| | எவ்ரசீ | 19 | 24 |
| மொத்தம் | | | 11 |

(ஈ) 2003 திசெம்பர் 17 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, எஸ்எல்-சீ15 இன் கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் வங்கியிடமிருந்தான (ஜேஏபீஜசீ) ரூபா 3,047 மில்லியன் நிகழ்ச்சித்திட்டக் கடன் திறைசேரியூடாகப் பெறப்பட வேண்டியது என சபையால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, குறித்த தொகை திறைசேரிக்குக் கிடைத்திருந்த நிகழ்ச்சித்திட்டக் கடனாக இருந்தமையால் அதனை எதிரீடு செய்வதற்குக் கருதப்படலாகாது என திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் தனது 2006 திசெம்பர் 02 ஆந் திகதிய ரீஓ/ஆர்ஈவீ/எஸ்எல்/2/96 ஆம் இலக்க கடிதத்தினால் சபைக்கு அறிவித்திருந்தார். அதன்படி அத்தொகை 2003 இல் பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டு அது முதல் அறவிடக்கூடிய தன்மையினை மதிப்பீடு செய்யாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

2013 இல் சபையின் கணக்குகளிலிருந்து அந்தப் பெறவேண்டிய மீதியினை பதிவழிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், **எல்கேஏஎஸ் 10 – அறிக்கையிடல் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்** இன் பிரகாரம் அது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 38 மில்லியன் பெறுமதியான 12 காணிகளிற்கான காணி உறுதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) டபிள்யூபீஎஸ் - II உடன் தொடர்புடைய பின்வரும் தொழில்களை ஒரு வருடத்திற்கும் மேலாக முடிவுறுத்தாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

| **காலப் பகுப்பாய்வு** | **தொழில்களின் எண்ணிக்கை** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுறா வேலைகளின் பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** |
| 1 – 2 ஆண்டுகள் | 2,344 | 450 |
| 2 - 3 ஆண்டுகள் | 1,016 | 268 |
| 3 - 4 ஆண்டுகள் | 317 | 124 |
| 4 – 5 ஆண்டுகள் | 121 | 58 |
| 5 ஆண்டுகளிற்கு மேல் | 350 | 64 |
| **மொத்தம்** | **4,148** | **964** |

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு மாதங்களுக்கு முன்னர் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 14 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதிகொண்ட ஏழு இருப்பு விடயங்கள் ஆண்டின் இறுதி இருப்புக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஈ) திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 128,240 மில்லியன் பெறுமதியான நான்கு கடன்கள் தொடர்பில் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்காததுடன் அதன் காரணமாக மீளளித்தல் பட்டியல் மற்றும் அக்கடன்களிற்கான வட்டிகள் என்பன கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம்

(i) **47 (1) (ஆ) ஆம் பிரிவு** – சபையினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பாக சபை பொதுத் திறைசேரியுடன் ஆழ்

நிதியமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். கடன் மீட்டல் ஒதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அது 2000 முதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

(ii) **47 (2) (அ) ஆம் பிரிவு** – சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வினை மேவுவதற்காக சபை பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோரும் ரூபா 1 மில்லன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(iii) **47 (2) (ஆ) ஆம் பிரிவு** – சபையின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்குடனும் சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சபை அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 165.46 மில்லியனாகும்.

(ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள அதன் மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீதமான பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி எஸ்கரோ நிதியத்தில் 2012 திசெம்பர் 31

இல் உள்ளவாறு ரூபா 4,433 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சபை முதலீடு செய்திருந்தது.

(இ) 2009 முதல் அமுலுக்கு வருகின்ற அடுத்த சம்பளத் திருத்தத்லிருந்து உழைக்கும்போதே செலுத்தும் வரிப்பொறுப்பினை ஊழியர்களிற்கு நகர்த்துதல் வேண்டும் என்ற 2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ஊழியர்களால் தாங்கிக் கொள்ளப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினை சபை செலுத்தியிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் செலுத்தப்பட்டிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 981 மில்லியன் ஆகும்.

| **ஆண்டு** | **தொகை** |
|---|---|
| | ரூபா |
| 2009 | 215,052,824 |
| 2010 | 362,275,677 |
| 2011 | 194,306,233 |
| 2012 | 269,762,012 |
| மொத்தம் | 981,396,746 |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட சீஈபீ இன் நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 61,447 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்திற்கெதிராக முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 20,185 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தினை ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவில் ரூபா 41,262 மில்லியன் மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் படி, 2012 ஆம் ஆண்டில் நீர்மின்சார உற்பத்தியானது நீரேந்துப் பகுதிகளில் காணப்பட்ட குறைவான நீர் மட்டம் காரணமாக 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட 4,619 ஜீடபிள்யூஎச் உடன் ஒப்பிடுகையில் 1,327 ஜீடபிள்யூஎச் இனால் அல்லது 29 சதவீத குறைவை காட்டியது. அதன் விளைவாக 2012 இல் அதிகரித்த 451 ஜீடபிள்யூஎச்

கேள்வியினை சமாளிப்பதற்காக அனல் மின்சார உற்பத்தி 1,552 ஜீடபிள்யூஎச் (நிலக்கரியினைப் பயன்படுத்தி 1,404 ஜீடபிள்யூஎச் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது) அல்லது 23 சதவீதத்திால் அதிகரித்திருந்தது.

**உற்பத்தி விபரங்கள்**

| | **2012** | **2011** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| **மூலம்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **%** |
| நீர்மின் | 3,292 | 4,619 | -1,327 | 29 |
| அனல்மின் | 8,338 | 6,786 | 1,552 | 23 |
| மாற்றீடு செய்யப்படாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 171 | 125 | 46 | 37 |
| **மொத்தம்** | **11,801** | **11,530** | **271** | **02** |

தொடர்ச்சியான இந்நிலமை காரணமாக எரிபொருள் மற்றும் சுதந்திர மின்சார வழங்குனர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு செலவினத்தை சபை மேற்கொண்டிருந்தது. இவ்விரண்டு காரணிகளிற்காகவும் 2012 இல் ஏற்பட்டிருந்த செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 21,622 மில்லியன் மற்றும் ரூபா 36,120 மில்லியனாக காணப்பட்டது. அது மொத்த நட்டத்தினை முறையே 52 சதவீதத்தினாலும் 87 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்குப் பங்களித்திருந்தது.

(ஆ) கேள்வியில் ஏற்பட்டிருந்த ஓரளவு அதிகரிப்புக் காரணமாக ரூபா 31,052 மில்லியன் மேலதிக வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்த போதிலும், பிரதானமாக நிலவுகின்ற கட்டண கட்டமைப்பின் காரணத்தால் சபை 2012 இல் நட்ட நிலையினை எதிர்நோக்கியிருந்தது. எவ்வாறாயினும், சபையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த தேசியப் பங்களிப்பு விலை மதிக்கப்பட முடியாததாகும்.

**நட்ட தொகுப்பு - 2012**

| **வகை** | **இலாபம்/(நட்டம்)** | |
|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **%** |
| உள்நாடு | (32,716) | (54) |
| மதத்தலங்கள் | (795) | (01) |
| பொது நோக்கம் | 8,413 | 14 |
| கைத்தொழில் | (24,528) | (40) |
| ஹோட்டேல்கள் | (771) | (01) |
| வீதி விளக்குகள் | (2,346) | (04) |
| எல்ஈசீஓ விற்பனைகள் | (8,420) | (14) |
| **மொத்தம்** | **(61,164)** | **100** |

அதன் படி, பொது நோக்கம் தவிர்ந்த ஏனைய எல்லா நுகர்வோரும் சீஈபீ இன் நட்டத்திற்காக வித்தியாசமான வீதங்களில் பங்களித்திருந்தனர். உள்நாட்டு மற்றும் கைத்தொழில் நுகர்வோர்கள் நட்டத்திற்கு பெருமளவில் பங்களித்திருந்ததுடன் அவர்களது மொத்தப் பங்களிப்பு 94 சதவீதமாகக் காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் முடிவிலுள்ளவாறான நிதி நிலைமையின் முக்கிய விடயங்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| **விடயம்** | **நடப்பாண்டு** | **முன்னைய ஆண்டு (மீளமைக்கப்பட்டது)** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றத்தின் சதவீதம்** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 627,685 | 550,521 | 14 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 110,486 | 110,813 | (40) |
| மொத்தச் சொத்துக்கள் | 738,171 | 661,334 | 12 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 137,356 | 122,026 | 13 |
| **தொழிற்படு மூலதனம்** | **(26,870)** | **(11,214)** | **140** |
| ஈடுபடுத்திய மொத்த மூலதனம் | 600,815 | 539,307 | 11 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 407,585 | 281,843 | 45 |
| **உரிமைத்துவம்** | **193,230** | **257,464** | **(25)** |

இதன்படி, நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 77 பில்லியன் அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை காரணமாக மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 11 பில்லியன் எதிர்மறைப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2012 இல் ரூபா 27 பில்லியன் எதிர்மறையாக மாற்றமடைந்து 140 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவம் செய்தது. இவ்வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் நீண்ட காலக் கடன்களின் நடப்புப் பங்கு ரூபா 30 பில்லியனாலும் முன்னைய ஆணடின் 15 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சுதந்திர மின்

வழங்குனர்களிற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 14 பில்லியனால் அல்லது 93 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமையாகும்.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ரூபா 600 பில்லியன் தொகையான ஈடுபடுத்திய மொத்த மூலதனத்தில் 68 சதவீதம் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதியங்களால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் கடன் பங்கு 52 சதவீதமாகும்.

மேற்படி பகுப்பாய்வின் படி, முன்னைய ஆண்டுகளைப் போலவே 2012 ஆம் ஆண்டிலும் சபை பாரிய திரவத்தன்மை பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டமையால் பலவீனமான நிதி முகாமைத்துவத்தினை வெளிக்காட்டியது.

## 2.3 செயற்பாட்டு மீளாய்வு

### 2.3.1 மின்வலு உற்பத்தி

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி விபரங்களின் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2012 | | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|
| **மூலம்** | **ஜிடபிள்யூஎச்** | **%** | **ஜிடபிள்யூஎச்** | **%** | **ஜிடபிள்யூஎச்** | **%** |
| நீர்மின் | 3292 | 28 | 4619 | 40 | 5634 | 53 |
| அனல்மின் | 8338 | 71 | 6786 | 59 | 4994 | 47 |
| மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 171 | 1 | 125 | 1 | 86 | 1 |
| **மொத்தம்** | **11,801** | **100** | **11,530** | **100** | **10,714** | **100** |

இதன் படி, முன்னைய மூன்று ஆண்டுகளில் நீர்மின்சார உற்பத்தியானது தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தமை வெளிப்பட்டதுடன் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடின்றி தனது செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு அனல் மின்சாரத்திற்கு மாறுவதனைத் தவிர சபைக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. எவ்வாறாயினும், பொது மக்களிற்கு குறைந்த கிரயத்தில் மின்சார அலகை வழங்கும் தனது பிரதான குறிக்கோளை மீளாய்வாண்டிலும் கூட சபை அடைந்து கொண்டிருக்கவில்லை.

### 2.3.2 நேர்க் கிரய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சபையின் விற்பனைக் கிரயத்தின் பொழிப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம்** | **ரூபா மில்லியன்** | **மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம்** |
| எரிபொருள் | 53,614 | 24 | 31,992 | 21 |
| மின்வலு கொள்வனவு | 120,264 | 54 | 84,144 | 56 |
| செயற்பாடு மற்றும் பேணல் | 27,530 | 12 | 18,629 | 12 |
| பெறுமானத்தேய்வு | 21,011 | 10 | 16,684 | 11 |
| **மொத்தம்** | **222,419** | **100** | **151,449** | **100** |

மேற்படி தகவல்களின் படி, மொத்தக் கிரயத்தில் 70 சதவீதத்திற்கும் மேல் மின்வலு கொள்வனவு மற்றும் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை வெளிப்பட்டது.

### 2.3.3 அலகு விலை பகுப்பாய்வு

2010 இல் ஈட்டப்பட்ட ஒரு சிறிய இலாபத்தைத் தவிர்த்து முன்னைய ஐந்து ஆண்டுகளில் ஒரு அலகு மின்சார விற்பனையிலிருந்தான சராசரி நட்டத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. அதன் படி, ஒரு அலகுக்கான அதிகூடிய நட்டம் 2012 இல் பதிவுசெய்யப்பட்டது.

**அலகு விலை பகுப்பாய்வு**

| ஆண்டு | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி விற்பனை விலை | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி கிரயம் | அலகொன்றிற்கான இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|
| 2008 | 13.22 | 18.15 | (4.93) |
| 2009 | 13.13 | 14.71 | (1.58) |
| 2010 | 13.16 | 13.02 | 0.14 |
| 2011 | 13.22 | 15.59 | (2.37) |
| 2012 | 15.66 | 21.50 | (5.84) |

## 2.4 சர்ச்சசைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிருவாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சாரசபைக்கான நிருவாக ஒழுங்கு விதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்காதுவிட்டால் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்ததப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அமைச்சரவையின் அல்லது பொது நிர்வாக அமைச்சின் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சபையினால் 39 பல்வேறு பதவியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2012 இல் அவ்வாறான படிகளாக ரூபா 612 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமையினை மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனை வெளிப்படுத்தியது.

(ii) 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக செய்திப்பத்திரிகை விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்றன ஊடாக தகைமைகொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து நாடுதளுவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோராது எழுதுவினைஞர்கள், காசாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற திறன்கள் அற்ற மற்றும் பகுதியளவில் திறன்கள் கொண்ட பதவியினரை சபை வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. அதன் விளைவாக மிகப் பொருத்தமான நபர்களை தொடர்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை சபை இழந்திருந்தது.

(iii) சபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 1,000 தற்காலிக மாதாந்தப் படி தொடர்பில் முன்னைய ஆண்டுகளிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயம் மீளாய்வாண்டிலேனும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் - 14 சதவீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீதத்தில் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சபை பாரிய திரவத்தன்மை பிரச்சினையை எதிர்கொண்டிருப்பினும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஊழியர்களிற்கு கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தரப்பட்ட தகவல்களின்படி, சபையின் நிதி முகாமையாளருக்கு முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்படாதிருந்த போதிலும், 1990 ஆம் ஆண்டிலிருந்து அதாவது நிதியம் கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து காப்புறுதி ஒதுக்கத்தின் முதலீடு தொடர்பாக அவர் தீர்மானம் எடுத்திருந்தார். வேண்டப்பட்ட அங்கீகாரமின்றி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 4,433 மில்லியனாகும்.

(இ) இலங்கை மின்சார சபைக்கு பிரதியொன்றின்றி 2004 இல் வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைக்கு எழுதப்பட்டிருந்த திறைசேரியின் கோவையிலுள்ள கடிதமொன்றை அடிப்படையாகக் கொண்டு 2003 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,200 மில்லியன் திறைசேரிக் கடன் மீதியினை 2013 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியின் செயலாளருடன் தொடர்புகொள்ளாது அவ்வாறான தீர்மானமொன்றை எடுத்தல் கேள்விக்குரியதாகும்.

(ஈ) 2008 மார்ச் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி சபையின் 10 சதவீத புதுப்பிக்கத்தக்க சக்திக் கிரயம் நிலைபேறான சக்தி அதிகார சபையால் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், மேலே காட்டப்பட்ட ஒழுங்கின்படி, சபைக்கு கிடைக்கவேண்டிய அத்தகைய புதுப்பிக்கத்தக் சக்திக் கிரயம் 2008 முதல் நிலைபேறான சக்தி அதிகாரசபையால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மீளளிக்கத்தக்க தொகை ரூபா

897 மில்லியனாகும். எனினும், நிலைபேறான சக்தி அதிகாரசபை நிதிக் கூற்றுக்களில் அதனை ஒரு பொறுப்பாக பதிவு செய்திருக்கவில்லை.

(உ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 3,724 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் சபையின் சுய காப்புறுதிக் கொள்கையின் படி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கு சபையில் பொருத்தமான நிதி முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) லெகோ மின்சாரக் கம்பனிக்கு பல ஆண்டுகளாக சபை மின்சாரத்தை விற்பனை செய்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்துமிருந்த போதிலும், அந்த இரு தரப்பினர்களுடன் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32 மில்லியன் சந்தைப் பெறுமதிகொண்ட சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களிற்காக வினியோக வலயம் 3 இன் விலை மதிப்புக் குழுவால் அறிவிக்கப்பட்ட பின்வரும் நிலமைகளை அவ்வாறு செய்வதற்கான தொடர்புடைய அதிகாரம் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறாமையால் திருப்திகரமாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

- ஒத்த பகுதியைக் கொண்டு முன்பக்க மூடி பதிலீடு செய்யப்பட்டது. (24 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட ஏ 2ரீ பாரந்தூக்கி உள்நாட்டில் பொருத்தப்பட்டது (2 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட மூடியைக் கொண்டு அசல் மூடி பதிலீடு செய்யப்பட்டது. (2 வாகனங்கள்)
- பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட ரக மூடி மற்றும் தட்டினைக் கொண்டு அசல் முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- பயன்படுத்தப்பட்ட பகுதிகளைக் கொண்டு முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- ஒரு பாரந்தூக்கி உள்நாட்டில் பொருத்தப்பட்டது (1 வாகனம்)

(ஏ) அளவிடக்கூடிய (சகல நிர்வாகக் கிரயங்கள், நிலையான செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கட்டணங்கள், மற்றும் தொடர்புடைய செலவினங்களை உள்ளடக்கிய) மற்றும் அளவிட முடியாத (கம்பனியின் கடன் சேவைக் கடப்பாடுகள்) என்ற இரண்டு உப கூறுகளைக் கொண்ட இயலளவுக் கட்டணங்கள் சுதந்திர மின்வலு உற்பத்தியாளர்களுக்கு (ஐபீஎஸ்) செலுத்தப்பட்டிருந்தன. அளவிடப்பட முடியாத கூறினை (கடன் மீள்நிரப்பல்) மீளளிக்கப்படுவதற்கான காலம் காலாவதியாகியிருந்த போதிலும், சபை அக்கூறினை மீளளிப்புச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2012 இல் அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த தொகை யூஎஸ்டொலர் 15 மில்லியன் மற்றும் யப்பானிய யென் 183 மில்லியனாகும்.

(ஐ) ஐபீஎஸ் களிற்கு உரித்தான மின்வலுப் பொறியின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் இயலளவுக் கட்டண அளவிடக்கூடிய கிரயக் கூறில் உள்ளடங்கியிருந்ததுடன் அக்கிரயங்கள் ஏற்பட்டதா அல்லது இல்லையா என்பதனைக் கருத்திற்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தன. மேலும், அப் பேணுகைக்கான பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகள் சபையால் தனியாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அச்செலவினங்களை மீளளிப்பதற்கு வரையறையொன்று காணப்படவில்லை. சில ஐபீஎஸ் ஏனைய சில ஐபீஎஸ் களின் பேணுகை ஒப்பந்தங்களை பொறுப்பேற்றிருந்ததுடன் ஐபீஎஸ் களிற்கிடையே தொடர்புடைய தரப்பு மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் காணப்பட்டன. அதன் காரணமாக மின்வலுப் பொறிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினது உள்ளபடியான பயன்படுத்தலை மெய்மையாய்வு செய்யாது வரிகள் அடங்கலான செலவின மீளளிப்பின் புத்திசாதுரியத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. 2012 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு மீளளிக்கப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா 1,261 மில்லியனாக காணப்பட்டது.

## 2.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடக்கு மின்வலு இல்லம் 30 ஜீடபிள்யூஎச் பொறி இயலளவுடன் வட மாகாணத்திலுள்ள தனியார் மின்வலு உற்பத்தியாளராகும். இருப்பினும், பரிசோதனைத் தவறு காரணமாக மின்வலுப் பொறியின் ஆரம்பம் முதல் இணங்கப்பட்ட ஜீடபிள்யூஎச் மின்சாரத்தினை கம்பனியால் வழங்க முடியாது

போயிருந்ததுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த சராசரி ஜீடபிள்யூஎச் 15 ஜீடபிள்யூஎச் களிற்கும் குறைவானதாகும். மேலும், ஏனைய ஐபீஈஸ் களின் விலையுடன் ஒப்பிடுகையில் அவர்களது அலகு விலை அதிகமாக காணப்பட்டதுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் அக் கம்பனியிடமிருந்து மின்வலுவைக் கொள்வனவு செய்தமையால் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் வருமாறு.

| ஆண்டு | சராசரி அலகுக் கிரயம் | சராசரி விற்பனை விலை | அலகு ஒன்றுக்கான நட்டம் | மொத்த நட்டம் |
|---|---|---|---|---|
| | கேடபிள்யூஎச்/ரூபா | கேடபிள்யூஎச்/ரூபா | கேடபிள்யூஎச்/ரூபா | ரூபா மில்லி. |
| 2010 | 17 | 13 | 4 | 223 |
| 2011 | 18 | 13 | 5 | 429 |
| 2012 | 24 | 16 | 8 | 407 |

(ஆ) பிராந்தியம் - 1 அலுவலகத்தினால் கல்வனைஸ்ட் செய்வதற்காக தொடர்புடைய தரப்புக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் பெறுமதியான கல்வனைஸ்ட் அல்லாத விடயங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருக்காததுடன் இந்த நட்டத்தினை தொடர்புடைய தரப்புக் கம்பனியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிராந்தியம் 3 இன் மதிப்பீட்டுக் குழுவினால் ரூபா 76 மில்லியனாக பெறுமதியிடப்பட்டிருந்த 79 வாகனங்கள் வீதியில் ஓடப்பட முடியாதவையாக காணப்பட்டன. ஆனால், அவை தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 இல் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட ரூபா 30 மில்லியன் கிரயத்திலான சேதமடைந்த இருப்பு விடயங்கள் 2013 யூலை 31 வரையிலும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாது தற்போதும் டபிள்யூபீஎஸ் II பிராந்திய களஞ்சிய வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் பேணிவரப்பட வேண்டிய தேவைப்படுத்தப்பட்ட ரூபா 86 மில்லியன் பாதுகாப்பு வைப்பிற்கும் குறைவாக ரூபா 61 மில்லியனை மேல்மாகாணம் தெற்கு II அலுவலகத்தின் 172 நுகர்வோர்கள் பேணியிருந்தனர். அதன் காரணமாக சபை அந்த நுகர்வோருடன் அதிக கடன் ஆபத்துடன் கருமமாற்றி வருகின்றது.

(ஊ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் படி சகல பொது முயற்சிகளும் எல்லாப் பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கி தமக்கென உரித்தான முறைமைகள்/கையேடுகளை வைத்திருப்பதுடன் காலத்திற்கேற்ப திருத்தப்பட்டு நாளதுவைரயாக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 1987 அளவில் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கையேடுகளை சபை திருத்தி நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் நிலவிய பாரிய நிதி நெருக்கடியை கருத்திற்கொள்ளாது எவ்வித வரையறையுமின்றி 12,880 ஊழியர்களிற்கு சபை ரூபா 2,472 மில்லியன் பதவியணியினர் கடன்களை வழங்கியிருந்தது.

(i) வெளிவாரி கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கடன்களிற்காக ஊழியர்களிற்கு 2/3 வட்டியினை மீளளித்தல் தொடர்பில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. 2012 இல் அவ்வாறு மீளளிப்பு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 892 மில்லியனாகும்.

- உரித்துடைய கடன் எல்லையினை விஞ்சிய ஊழியர்களிற்கு கடன் வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- நிலையான வைப்புக்கள், தனிப்பட்ட உத்தரவாதங்கள் போன்ற ஆதனங்களை அடகு வைத்து எடுக்கப்பட்ட தனிப்பட்ட கடன்களிற்காக வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- வாழ்க்கைத் துணையல்லாத ஏனைய தரப்பினர்களுடன் இணைந்து உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட கடன்களிற்காக வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- நிதி நிறுவனங்களின் முறைசாராத கடிதங்களின் அடிப்படையில் வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்

- ஏனைய கடன்களை தீர்ப்பதற்காக பெறப்பட்ட கடன்களிற்கான வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- வாழ்க்கைத் துணையின் அல்லது உத்தியோகத்தரின் பெயரிலல்லாத ஆதனங்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களிற்கான வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்

(ii) மோட்டார் சைக்கிள் கடன்கள் அல்லாத ரூபா 332 மில்லியன் வாகனக் கடன்கள் சபையின் 172 ஊழியர்களிற்கு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- ➢ கடன்கள் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையின் விளைவாக குறித்த நோக்கத்திற்காக கடன் தொகை பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

- ➢ அநேக சந்தர்ப்பங்களில் கடனின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் சபையில் ஈடாக வைக்கப்பட்டிருக்கவில்லை.

- ➢ உயர் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் (முகாமையாளர்கள்) எடுக்கப்பட்ட கடன்களிற்கு கீழ் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் (உதவியாளர்கள்) உத்தரவாதம் வழங்கியிருந்தனர்.

- ➢ கடன் பெறுனரினதும் பிணைதாரரினதும் நாற்பது சதவீத அல்லது அறுபது சதவீத சம்பள எல்லை தகுதி விதியினைக் கருத்திற்கொள்ளாது கடன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- ➢ தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- ➢ தகுதியுடைய எல்லைக்கும் மேலாக கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- ➢ முன்னர் வழங்கப்பட்ட கடனிற்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாக முன்னரே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- முன்னர் பெறப்பட்ட கடனில் நிலுவையாக உள்ள மீதிகள் முழுமையாகச் தீர்க்கப்படாமலேயே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- பூரணத்துவமற்ற கடன் உடன்படிக்கைகள் அவதானிக்கப்பட்டன.

- சுங்கத் தீர்வை சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடனொன்றுடன் தொடர்புடைய காசோலை சபை பொது முகாமையாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் பெறுபவரால் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வங்கியின் பெயரிலல்லாது சபையிடமிருந்து கடனைப் பெறும் உத்தியோகத்தரின் பெருக்கு எழுதப்பட்டிருந்தது.

- குறிப்பிட்ட பிரிவுகளால் வழங்கப்பட்ட கடன்கள் தீர்ப்பனவு செய்யப்படும் வரைக்கும் தொடர்ச்சியான அடிப்படையில் வருடாந்த வருமான உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் பூரணமான காப்புறுதிச் சான்றுகளின் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு செவ்வை பார்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின்றி மனித உழைப்பு கம்பனிகளிடமிருந்து ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தினை மிகைத்து 946 ஊழியர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியிலிருந்து பெறப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,045 ஆக இருந்ததுடன் அது சபையின் மொத்த பதவியினர் பலத்தில் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிலுள்ள பின்வரும் பிரதான பதவிகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்தன.

| **வகை** | **வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| நிறைவேற்றுனர் | 186 |
| மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவை | 177 |
| திறன் தொழில்நுட்பச் சேவை | 579 |
| அரை- திறன் தொழில்நுட்பச் சேவை | 1,599 |
| ஏனைய திறன்கள் பதவியணி | 34 |
| **மொத்தம்** | **2,575** |

(உ) திறன்களற்ற வெளிக்களச் சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,716 ஆல் மிகைத்துக் காணப்பட்டது.

(ஊ) பதவியுர்வுக்காக சிரேஷ்ட அடிப்படையினை மாத்திரம் கருத்திற்கொள்வதனைத் தவிர வெற்றிகரமான திட்டமொன்று காணப்படவில்லை. ஆகையால் பதவியுர்த்தப்படுவதனால் ஊழியர்கள் நன்மை அடைந்தனரேயன்றி நிறுவனமல்ல. சபை வழமையாக பிரதான பதிவிகளுக்கு அரையாண்டிலும் பார்க்க குறைவான காலத்திற்கே பதவியுயர்வுகளை வழங்கியிருந்தது.

(எ) பொருத்தமான இடமாற்றக் கொள்கையொன்று அமுல்படுத்தப்படுதல் அவதானிக்கப்படவில்லை. விசேடமாக பிரதான பதவிகளிலுள்ள சில ஊழியர்கள் ஒத்த பதிவியில் அதே இடத்தில் பத்து ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகளிற்கும் மேலாக கடமையாற்றியிருந்தனர். அத்துடன் ஊழியர்கள் பதியுயர்விற்கு தகுதிபெறுகையில் சகல துறையிலுமான அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த சூழலை இந்நடைமுறை வழங்குவதில்லை. உதாரணமாக விநியோக ஒருங்கிணைப்புச் சபைகளில் அங்கத்தவர்களாக இருந்து தற்போது பிரிவுகள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களிற்குப் பிரதானிகளாக காணப்படுகின்ற சகல நான்கு பிராந்தியங்களிலுள்ள உதவிப் பொது முகாமையாளர்கள் வினியோகத் துறையில் அனுபவமற்றவர்களாக உள்ளனர்.

(ஏ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவி பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகும். ஆனால், விசேடமாக மின்னியல் பொறியியலாளர் போன்ற ஏனைய சேவையிலுள்ளோருக்கும் இப் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் தேவையான மனித வளத் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் முழுமையானதும் சரியானதுமானதும் எனக் கருதப்பட முடியவில்லை.

(ஐ) சபையில் ஆளணி முகாமைத்துவப் பிரிவிலுள்ள பிரதான பொறியியலாளர் என்ற பதவி (மனிதவள கொள்கை) தனித்தனியான இரண்டு உயர்திறன்தொழிலாளர் களுக்கிடையே பொருந்தாமை வெளிப்பாட்டைக் காட்டும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

(ஒ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி, மனித வள உத்தியோகத்தர் சேவையின் மொத்தப் பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் சரித்திரத்தில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படாததுடன் அப்பிரிவிலுள்ள 4 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பதவிகள் மனித வளத் துறையிலல்லாத ஏனைய சேவைகளிற்கு திறந்து விடப்பட்டிருந்தது.

(ஓ) மனித வள முகாமையாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்குத் தேவையான அனுபவம் 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ள போதிலும் இந்த நிறுவனத்தில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

## 2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் ஊடாக சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்

(இ) பதிவேட்டுப் பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்

(ஈ) மனித வள முகாமைத்துவம்

(உ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்

(ஊ) முதலீடுகள் மற்றும் துணைக் கம்பனிகள் மீதான கட்டுப்பாடு

(எ) நடைபெறும் வேலை

(ஏ) செயற்திட்ட முகாமைத்துவமும் கட்டுப்பாடும்

(ஐ) பாதீடு

(ஒ) பதவியினர் கடன்கள்

(ஓ) விற்பனைகள்